**சுருக்கம்**

வேளாண்மை - உழவர் நலன் – தோட்டக்கலை - வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2025-26 - மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் - பலா மேம்பாட்டு இயக்கம் – ஒன்றிய, மாநில அரசு பகிர்வு நிதியில் திட்ட செயலாக்கத்திற்கு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை-உழவர் நலத் (தோ.க.2) துறை**

அரசாணை (நிலை) எண்.189

நாள்:08.07.2025.
திருவள்ளுவர் ஆண்டு 2056,
விசுவாவசு வருடம்,
ஆனித் திங்கள் 24-ஆம் நாள்
படிக்கப்பட்டவை:

1. 2025-2026 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 15.03.2025 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்புகள்.
2. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநரின் கடித எண்.மா.தி.2/5079/2025, நாள் 30.04.2025 மற்றும் 18.06.2025.

*******

**ஆணை:**

மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 15.03.2025 அன்று சட்டமன்றப் பேரவையில் வெளியிடப்பட்ட 2025–2026 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் இன்ன பிறவற்றுள் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

**வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2025-26**

**அறிவிப்பு எண்-35 -பலா மேம்பாட்டு இயக்கம் 2025-26**

"2023-2024 மற்றும் 2024-2025 ஆம் ஆண்டுகளில், பலாவிற்குச் சிறப்புத் திட்டம் அறிவிக்கப்பட்டு, பரப்பு விரிவாக்கம், ஒருங்கிணைந்த உரம் மற்றும் பூச்சி மேலாண்மை, சிறிய அளவிலான பலா பதப்படுத்தப்படும் அமைப்பு, பலா சாகுபடி மற்றும் மதிப்புக் கூட்டுதலுக்கான பயிற்சி ஆகியவற்றிக்கு மானியம் வழங்கிட 3 கோடியே 71 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. இதன் மூலம், இதுவரை 2,876 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். 2025-26 ஆம் ஆண்டில் புதிய இரக பலா சாகுபடி பரவலாக்கம், பலாவில் ஊடுபயிர் சாகுபடி போன்ற திட்டக்கூறுகள் ஊக்குவிக்கப்படும். இதற்கென 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்."

2. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் தனது கருத்துருவில் முக்கனிகளில் இரண்டாவது கனியான பலா தமிழ்நாட்டில் 3,415 எக்டர் பரப்பளவில் அரியலூர், கடலூர், கள்ளக்குறிச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், தேனி, விழுப்புரம் மற்றும் திருச்சி போன்ற மாவட்டங்களில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது என்றும், பலாவில் புதிய இரகங்களான சித்து பலா, சங்கரா பலா, வியட்நாம் சூப்பர் எர்லி பலா, ஜே-33 பலா போன்ற இரகங்களை சாகுபடி செய்வதற்காகவும், விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தும் வகையில் பலாவில் ஊடுபயிர் சாகுபடியினை ஊக்குவிக்கும் பொருட்டும், பலா மேம்பாட்டு இயக்கத்தினை செயல்படுத்துவதற்காக கீழ்க்காணும் திட்டக்கூறுகளுக்கான விரிவான கருத்துருவினை அரசுக்கு அனுப்பியுள்ளார்:-

<u>I. திட்டக்கூறுகள்:</u>

**1. பலா பரப்பு விரிவாக்கம்:**

விவசாயிகள் குறைந்த செலவில், அதிக வருமானம் பெறுவதற்காக பரப்பு விரிவாக்கம் இனத்தின் கீழ் பலாப்பழம் உற்பத்தியை ஊக்குவிக்கும் விதமாக 229 எக்டர் பரப்பளவில் 40 சதவீத மானியமாக ரூ.0.412 கோடி நிதி (தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) மற்றும் பிரதம மந்திரியின் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (PM-RKVY)) ஆகியவற்றின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும்.

**2. பலா மேம்பாடு- புதிய வகை இரகங்கள் அறிமுகம்:**

விவசாயிகளுக்கு அதிக மகசூல் வழங்கும் புதிய பலா இரகங்களான சித்து, சங்கரா, வியட்நாம் சூப்பர் ஏர்லி, ஜே-33, போன்ற இரகங்களை வளர்ப்பதை ஊக்குவிக்கும் வகையில் 200 எக்டர் பரப்பளவிற்கு 40 சதவீத மானியம் வழங்க ரூ.0.360 கோடி நிதி தேசிய தோட்டக்கலை இயக்கத்தில் (NHM) ஒதுக்கீடு செய்யப்படும்.

**3. பலா முதல் நிலை செயல் விளக்கம்:**

கிராமப்புற விவசாயிகளுக்கு பலா மரங்களை இயற்கை முறையில் வளர்த்தல், ஊடுபயிர் சாகுபடி செய்தல், தரமான பலாப்பழங்களை உற்பத்தி செய்தல், அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பத்தை ஊக்குவித்தல், நுண்ணீர்ப் பாசனம் போன்ற வருமானம் ஈட்டும் புதிய தொழில்நுட்பங்களை செயல் விளக்கங்கள் மூலம் ஊக்குவிக்க 2 செயல்விளக்கங்களுக்கு 100 சதவீத மானியமாக ரூ.0.500 கோடி நிதி தேசிய தோட்டக்கலை இயக்கத்தில் (NHM) ஒதுக்கீடு செய்யப்படும்.

**4. குறைந்த அளவிலான பதப்படுத்தப்படும் கூடம்:**

பலாப்பழங்களை பழமாக விற்பனை செய்வதைவிட பதப்படுத்தி மதிப்பு கூட்டுவதன் மூலம் விவசாயிகளின் வருமானம் அதிகரிக்க முடியும். எனவே முதன்மை/குறைந்த அளவிலான பதப்படுத்தும் கூடம் அமைக்க 2 கூடங்களுக்கு 40 சதவீத மானியமாக ரூ. 0.245 கோடி நிதி தேசிய தோட்டக்கலை இயக்கத்தில் (NHM) ஒதுக்கீடு செய்யப்படும்.

**5. மாவட்ட அளவிலான கருத்தரங்கு:**

பலாவின் சாகுபடி முறைகள் அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை, பூச்சிக்கொல்லி மேலாண்மை மற்றும் நாற்றங்கால் நுட்பங்கள் ஆகியவற்றைப் பற்றி 21 மாவட்டங்களில் உள்ள 200 விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 21 கருத்தரங்குகள் நடத்த 100 சதவீத மானியமாக ரூ.0.420 கோடி நிதி தேசிய தோட்டக்கலை இயக்கத்தில் (NHM) ஒதுக்கீடு செய்யப்படும்.

**6. துளி நீரில் அதிக பயிர் (நுண்ணீர்ப் பாசனம்):**

துல்லியமான நீர் மேலாண்மை மூலம் பலா பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளின் வருமானம் மற்றும் உற்பத்தியை அதிகப்படுத்தும் நோக்கில் 'துளி நீரில் அதிக பயிர்' திட்டத்தின் கீழ் 75 எக்டர் பரப்பளவில் நுண்ணீர்ப் பாசனம் அமைக்க ரூ.0.240 கோடி மத்திய (ரூ.0.0723 கோடி) மற்றும் மாநில (0.1677 கோடி) அரசின் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ் சிறு/குறு விவசாயிகளுக்கு 100% மானியமும், இதர விவசாயிகளுக்கு 75% மானியமும் வழங்கப்படும்.

**7. பலா சாகுபடி மற்றும் மதிப்புக் கூட்டுதலுக்கான பயிற்சி வழங்குதல்:**

சிறந்த முறையில் பலாப்பழ சாகுபடி செய்தல், மதிப்புக் கூட்டுதல், சந்தைப்படுத்துதல் குறித்த செயல் விளக்கப்பயிற்சியானது, 21 மாவட்டங்களைச் சேர்ந்த 420 விவசாயிகளுக்கு அண்டை மாநிலங்களில் ரூ.21.00 இலட்சம் நிதியில் அட்மா (ATMA) வழிமுறைகளுக்கு உட்பட்டு பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**8. சூரியக்கூடார உலர்த்தி:**

பலாவினை குறைந்த விலையில் சூரியசக்தி கொண்டு உலர்த்தும் தொழில்நுட்பம் சூரியக்கூடார உலர்த்தி (solar dryer). இதில் சூரிய ஒளியை வெப்பமாக மாற்றி குடிலின் வெப்பம் அதிகரிக்கப்படுகிறது. இதனால் உள்ளே உள்ள பொருட்கள் எளிதில் குறைந்த நேரத்தில் உலர்கின்றன. இவ்வாறு மிகக் குறைந்த நேரத்தில் நீரை வெளியேற்றுவதால் பொருளின் தரம், தன்மை குறையாமல் பதப்படுத்திப் பாதுகாக்கும் வகையில், 5 சூரியக்கூடார உலர்த்திகள் அமைக்க மானியம் வழங்க ரூ.0.175 கோடி ஒன்றிய, மாநில அரசு பகிர்வு நிதியிலிருந்து (வேளாண்மை இயந்திரமயமாக்குதல் துணை இயக்கத் திட்டத்தில் - SMAM) ஒதுக்கீடு செய்யப்படும்.

**<u>II. திட்ட செயலாக்கம்:</u>**

பலா மேம்பாட்டு இயக்கத்தின் 8 திட்டக்கூறுகள் ஒன்றிய, மாநில அரசு பகிர்வில் ரூ.2.5622 கோடி நிதியில் செயல்படுத்தப்படும்.

(ரூபாய் கோடியில்)

**ஒன்றிய, மாநில அரசு பகிர்வு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட உள்ள திட்டக்கூறுகள்**

| வ. எண் | திட்டக்கூறு | பொருள் (எக்டர்/ எண்கள்) | தேவைப் படும் மொத்த நிதி | ஒன்றிய அரசின் நிதி (60%) | மாநில அரசின் நிதி (40%) | திட்டத்தின் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | பரப்பு விரிவாக்கம் – பலாப்பழம்<br>Unit cost= Rs.45,000/- (மானியம் - 40% ரூ.18,000/- x 229 எக்டர் = ரூ.41.220 இலட்சம்) | 200 எக்டர் | 0.3600 | 0.2160 | 0.1440 | தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) |
| | | 29 எக்டர் | 0.0522 | 0.0313 | 0.0209 | பிரதம மந்திரியின் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (PM-RKVY) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | பலா மேம்பாடு-<br>புதிய வகை இரகங்கள் அறிமுகம்<br>Unit cost= Rs.36,000/-<br>(மானியம் - 50%<br>ரூ.18,000/- x<br>200 எக்டர் =<br>ரூ.36.000 இலட்சம்) | 200 எக்டர் | 0.3600 | 0.2160 | 0.1440 | தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) |
| 3 | முதல் நிலை செயல் விளக்கம்<br>Unit cost=Rs. 25,00,000/-<br>(மானியம் - 100%<br>ரூ.25,00,000/- x<br>2 எண்கள் =<br>ரூ.50.000 இலட்சம்) | 2 எண்கள் | 0.5000 | 0.3000 | 0.2000 | தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) |
| 4 | குறைந்த அளவிலான பதப்படுத்தப்படும் கூடம் Unit cost= Rs.35,00,000/-<br>(மானியம் - 35%<br>ரூ.12,25,000/- x<br>2 எண்கள் =<br>ரூ.24.500 இலட்சம்) | 2 எண்கள் | 0.2450 | 0.1470 | 0.0980 | தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) |
| 5 | மாவட்ட அளவிலான கருத்தரங்கு<br>Unit cost= Rs. 2,00,000/-<br>(மானியம் - 100%<br>ரூ.2,00,000/- x<br>21 எண்கள் =<br>ரூ.42.000 இலட்சம்) | 21 எண்கள் | 0.4200 | 0.2520 | 0.1680 | தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) |
| 6 | துளி நீரில் அதிக பயிர் (நுண்ணீர்ப் பாசனம்)<br>Unit cost= Rs.32,000/-<br>(மானியம் - 100%<br>ரூ.32,000/- (SF/MF) x<br>75 எக்டர் =<br>ரூ. 24.000 இலட்சம்) | 75 எக்டர் | 0.2400 | 0.0723 | 0.1677 | பிரதம மந்திரியின் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (PM-RKVY) – PDMC |
| 7 | பலா சாகுபடி மற்றும் மதிப்புக் கூட்டுதலுக்கான பயிற்சி வழங்குதல்<br>Unit cost= Rs. 1,00,000/-<br>(மானியம் - 100%<br>ரூ.1,00,000/- x<br>21 எண்கள் =<br>ரூ. 21.000 இலட்சம்) | 21 எண்கள் | 0.2100 | 0.1260 | 0.0840 | பயிற்சி -அட்மா (ATMA) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8 | சூரியக்கூடார உலர்த்தி அமைத்தல் (1000 Sq.m) Unit cost= Rs.7,00,000/- (மானியம் - 50% ரூ.3,50,000/- x 5 எண்கள் = ரூ.17.500 இலட்சம்) | 5 எண்கள் | 0.1750 | 0.1050 | 0.0700 | வேளாண்மை இயந்திரமய மாக்குதல் துணை இயக்கத் திட்டம் -SMAM |
| | மொத்தம் | | 2.5622 | 1.4656 | 1.0966 | |

3. வேளாண்மை நிதிநிலை அறிக்கை அறிவிப்பான பலா மேம்பாட்டு இயக்கத்தின் கீழ் மேற்காணும் 8 திட்டக்கூறுகளை ஒன்றிய, மாநில அரசு பகிர்வு நிதியில் (மதிப்பீடு ரூ.2.5622 கோடி) செயல்படுத்த அரசின் அனுமதி வழங்குமாறு தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்தபின், அக்கருத்துருவினை ஏற்கலாம் எனக் கருதி, மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 15.03.2025 அன்று வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளுள், மேலே பத்தி-1 இல் காணும் அறிவிப்பில் "பலா மேம்பாட்டு இயக்கத்தில் 8 திட்டக்கூறுகளை ஒன்றிய, மாநில அரசு பகிர்வு நிதியுதவியுடன் ரூ.2.5622 கோடியில் (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பத்தாறு இலட்சத்து இருபத்து இரண்டாயிரம் மட்டும்) செயல்படுத்த அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. இத்திட்டங்களுக்குரிய ஒன்றிய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளைத் தவறாமல் பின்பற்றுமாறு தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் 08.07.2025-ம் நாளிட்ட அ.சா. எண்.10381558/ நிதி (வே-உ.ந)/2025-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**வ.தட்சிணாமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு செயலாளர்**

பெறுநர்
இயக்குநர், வேளாண்மைத் துறை, சென்னை-5.
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை-5.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை முகமை, சென்னை – 5.
தலைமைப் பொறியாளர் (வே.பொ), (பொது),
வேளாண்மை பொறியியல் துறை, சென்னை -35.
முதன்மை கணக்காயர் (G&SSA/E&RSA), சென்னை-18.
இருப்பிட தணிக்கை அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை-9.
கருவூல கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

நகல்:
மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை- 9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் அவர்களின்
தனிச் செயலர், வேளாண்மை-உழவர் நலத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.
நிதித் (வே.உ.ந.) துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
வேளாண்மை-உழவர் நலத் (தோ.க.1/வே.உ.1/வே.பொ.1/அநமு.3/வ&தி) துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.
சம்பந்தப்பட்ட கோப்பு எண்.10381558/தோ.க.2/2025.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

8/7/25
பிரிவு அலுவலர்

8/7/25